# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 4, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. காவிரியில் தண்ணீர் திறந்து விடுவது தொடர்பான மேலாண்மை ஆணையத்தின் உத்தரவைச் செயல்படுத்த கர்நாடக மாநில அரசுக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்தது. இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:
   - (i) காவிரி நடுவர் மன்றம் 2007, பிப்ரவரி 5-ஆம் தேதி பிறப்பித்த இறுதி உத்தரவை உச்சநீதிமன்றம் தனது 16.2.2018- ஆம் தேதியிட்ட தீர்ப்பில் மாற்றியமைத்தது. அதன்படி, பிலிகுண்டுலுவில் ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காலத்தில் கர்நாடகம் உறுதி செய்ய வேண்டிய நீர்வரத்து 12.14 டிஎம்சி ஆகும்; அக்டோபர் முதல் ஜனவரி வரையிலான காலத்தில் 44.11 டிஎம்சி ஆகும். இந்த இருகால பகுதிகளையும் சேர்த்து ஆண்டுதோறும் மொத்தம் 167.25 டிஎம்சி நீர் வழங்கப்பட வேண்டும்.
   - (ii) இது தவிர, சுற்றுச்சூழல் சார்ந்த நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஆண்டுதோறும் 10 டிஎம்சி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் மொத்த அளவு 177.25 டிஎம்சி ஆகிறது. இந்தத் தீர்ப்பைச் செயல் படுத்துவதற்காக, மத்திய அரசால் அமைக்கப்பட்ட சட்டபூர்வ அமைப்புதான் காவிரி நீர் மேலாண்மை ஆணையம்.
   - (iii) அந்த ஆணையம் கடந்த ஜூலை 30-ஆம் தேதி பிறப்பித்த கட்டாய முடிவைச் செயல்படுத்தத் தவறிய கர்நாடக அரசுக்கு எதிராக அவசர உத்தரவுகளைப் பிறப்பிக்கக் கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்ய வேண்டிய கட்டாயத்தில் தமிழக அரசு உள்ளது.

2. மத்திய அரசால் 03.12.2025-ஆம் தேதி வெளியிடப்பட்ட 'காவிரிப் படுகையில் நீர் வளத் திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டுதல்களை ரத்து செய்யக் கோரி மேலும் ஒரு மனுவை தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அந்த மனுவில் தமிழக அரசு கூறியி ருப்பதாவது:
   - காவிரி நடுவர் மன்றத்தின் 05.02.2007-ஆம் தேதியிட்ட தீர்ப்பு, உச்சநீதிமன்றத்தின் 16.02.2018-ஆம் தேதியிட்ட தீர்ப்பு மற்றும் 1956-ஆம்

ஆண்டு மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவா சட்டத்தின் (1956-ஆம் ஆண்டு சட்டம்) பிரிவு 6 ஏ-வின் கீழ் மேற்படி நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டு 01.06.2018vதேதியிட்ட அரசிதழில் அறிவிக்கப்பட்ட காவிரி நீர் மேலாண்மைத் திட்டம், 2018 ஆகிய வற்றை மீறும் வகையில் மத்திய அரசின் வழிகாட்டுதல்கள் அமைந்துள்ளன.

- மத்திய அரசின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் காவிரிப் படுகையில் ஏதேனும் புதிய திட்டத்தைப் பரிசீலிப்பது, உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தலையிடுவதாகும்.
- காவிரிப் படுகையில் நீர்ப் பற்றாக்குறை உள்ள நிலையில், பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள், பல்நோக்குத் திட்டங்கள், குடிநீர்த் திட்டங்கள், நீர்மின் திட்டங்கள் மற்றும் ஆற்று நீரை இறைத்துச் சேமிக்கும் திட்டங்கள் ஆகியவற்றுக்காகத் தனிப்பட்ட வழிகாட்டுதல்களை வகுக்கும் வகையில் அமைந்துள்ள இந்தச் சர்ச்சைக்குரிய வழிகாட்டுதல்கள், நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பையும், அதை உறுதிப்படுத்திய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பையும் நேரடியாக மீறுவதாகும் என தமிழக அரசு அந்த மனுவில் கோரியுள்ளது.

3. மேற்கு ஆப்பிரிக்க நாடான கானாவில் அரசின் முன் அனுமதியின்றி கோகோ விவசாய நிலங்களை வேறு பயன்பாடுகளுக்கு மாற்றினால், விவசாயிகளுக்கு 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்க வழிசெய்யும் புதிய சட்டமசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(i) மேலும், கோகோ சாகுபடி பகுதிகளில் நடைபெறும் சட்ட விரோத தங்கச் சுரங்கத் தொழில்களுக்கு 10 முதல் 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையுடன், பாதிக்கப்படும் ஒவ்வொரு கோகோ மரத்துக்கும் அபராதமும் விதிக்க மசோதா வழிவகை செய்கிறது.

(ii) கானா நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாயில் கோகோ பீன்ஸ் சுமார் 15 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ளதுடன், லட்சக் கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் திகழ்கிறது. எனவே, கோகோ பண்ணைகளுக்குப் பாதுகாப்பு அந்தஸ்து வழங்கி, அவற்றை அனுமதியின்றி மாற்றுவதை இந்த மசோதா குற்றமாக அறிவிக்கிறது.

(iii) ஆனால், அரசின் இத்தகைய கடும் சட்ட நடவடிக்கைகளுக்கு அந்நாட்டு விவசாயிகள் மற்றும் வேளாண் சங்கங்களின் மத்தியில் கடும் எதிர்ப்பு

நிலவுவதால், அதிபர் ஜான் மஹாமா மசோதாவுக்கு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை.

4. சென்னையில் அலுவலக இடங்களுக்குத் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது.

(i) நகரில் சர்வதேச நிறுவனங்கள் உலகளாவிய திறன் மையங்களை (GCC) பெருமளவில் தொடங்குவதாலும், அலுவலகங்களுக்கான தேவை அதிகரித்துள்ளதாலும், அலுவலக காலியிட அளவு 2023-லிருந்த 15.8 சதவீதத்திலிருந்து தற்போது 10 சதவீதமாக குறைந்துள்ளது.

(ii) ரியல் எஸ்டேட் தரவு பகுப்பாய்வு நிறுவனமான 'சிஆர்இ மேட்ரிக்ஸ்' வெளியிட்டுள்ள 'சென்னை: ஆசியாவின் டெட்ராய்ட்; புத்தாக்கத்துடன் வளர்ச்சி' என்ற ஆய்வறிக்கையில், சென்னையின் உள்கட்ட மைப்பு, தகவல் தொழில்நுட்பத் (ஐ.டி.) திறன்கள் மற்றும் வர்த்தக அலுவலகச் சந்தையின் தற்போதைய நிலவரங்கள் விரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

(iii) தற்போதைய நிலவரப்படி, சென்னையில் 12 கோடி சதுர அடி பரப்பளவிலான 'ஏ அல்லது ஏ பிளஸ்' தரத்திலான அலுவலகங்கள் உள்ள நிலையில், மேலும் 4.2 கோடி சதுர அடி பரப்பளவிலான கட்டடங்கள் கட்டுமானத்தில் உள்ளன.

(iv) கடந்த 2023-இல் 15.8 சதவீதமாக இருந்த அலுவலக காலியிடங்கள், நடப்பு ஆண்டு ஜூன் மாத இறுதியில் 9.9 சதவீதமாக குறைந்துள்ளது. புதிய கட்டுமானங்களைவிட, அலுவலகங்களுக்கான தேவை 1.8 மடங்கு அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

(v) இந்தியாவின் மற்ற முன்னணி பெரு நகரங்களுடன் ஒப்பிடுகையில் சென்னை மிகக் குறைந்த வாடகையில் சிறந்த கட்டமைப்பு வசதிகள் கிடைப்பதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- தலைநகர் தில்லி (சதுர அடிக்கு ரூ.182), மும்பை (ரூ.175), குருகிராம் (ரூ.106), பெங்களூரு (ரூ.92) ஆகிய நகரங்களில் அலுவலக வாடகை மிக அதிகமாக உள்ள நிலையில், சென்னையில் தரம் வாய்ந்த அலுவலகங்கள் சதுர அடிக்கு ரூ.75 என்ற குறைவான மாத வாடகையில் கிடைக்கின்றன. மேலும், சென்னை ஐ.டி. துறையில் பணியாளர்கள் தாமாக முன்வந்து பணியிலிருந்து விலகும் விகிதமும் மிகக் குறைவாகவே உள்ளது. இதனால் நிறுவனங்கள் உள்கட்டமைப்பு மற்றும் திறமையான பணியாளர்களைச் சமரசம் செய்யாமல், 20 முதல் 60 சதவீதம் வரை தங்கள் செலவுகளைக் குறைக்க முடிகிறது.

(vi) இது குறித்து சிஆர்இ மேட்ரிக்ஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர் அபிஷேக் கிரண் குப்தா மேலும் கூறுகையில், 'சென்னை தற்போது 400-க்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்களையும், 2 லட்சத்துக்கும் மேற்பட்ட ஐ.டி. நிபுணர்களையும் கொண்டு, இந்தியாவின் முன்னணி பெருநகரங்களி லேயே அதிவேகமாக வளரும் மையமாகத் திகழ்கிறது. சென்னையின் வளர்ச்சி தேசிய சராசரியை விட இரு மடங்கு அதிகமாகும்' என்றார்.

5. பங்குச் சந்தையில் வர்த்த முடிவில் ஒரு பங்கின் இறுதி விலையை நிர்ணயிப்பதில் செபி புதிய முறையை அறிமுகப்ப டுத்தியுள்ளது.

(i) பழைய முறையில், வர்த்தகத்தின் கடைசி 30 நிமிடங்களில் பங்கு வர்த்தகமான விலைகளின் சராசரியை வைத்து இறுதி விலை கணக்கிடப்பட்டது. தற்போதைய புதிய 'சிஏஎஸ்' முறையில், சந்தை முடியும் சில நிமிஷங்களில் வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்களின் ஆர்டர்களை ஒன்றுத்திரட்டி, 'ஒரே ஏல முறையில்' அனைவருக்கும் பொதுவான நியாயமான விலை இறுதி விலையாக நிர்ணயிக்கப்படுகிறது.

(ii) இப்புதிய ஏல முறை அமலுக்கு வந்ததால், திங்கள்கிழமை வர்த்தகத்தின் இறுதி நிமிடங்களில் பெருமுதலீட்டாளர்களின் ஆர்டர்களும், பணப் பரிவர்த்தனைகளும் ஒரே இடத்தில் மொத்தமாகக் குவிந்தன. இதன்காரணமாகவே, நிஃப்டி சார்ந்த பங்குகளில் முதலீடுகள் அதிகம் குவிந்து, அந்தக் குறியீடு வழக்கத்துக்கு மாறாகத் தடாலென உயர்ந்து, சென்செக்ஸ் வளர்ச்சியுடன் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியது.

6. சைக்கிளிங் வீராங்கனைகளுக்கான சர்வதேச பந்தயமான டூர் டி பிரான்ஸ் ஃ பெமெஸில் பங்கேற்ற முதல் இந்தியராக, இளம் வீராங்கனை ஹர்ஷிதா ஜாகர் (19) சாதனை படைத்தார்.

(i) இந்தப் போட்டிக்காக, சர்வதேச சைக்கிளிஸ்ட் சங்கத்தால் (யுசிஐ) தேர்வு செய்யப்பட்ட 8 திறமையான போட்டியாளர்களில் அவரும் ஒருவராவார். அவர் தவிர, ஆப்கானிஸ்தான், அல்ஜீரியா, சிலி, எத்தியோபியா (2), நமீபியா, உகாண்டா ஆகிய நாடுகளில் இருந்து 7 வீராங்கனைகள் இதில் இடம் பிடித்துள்ளனர்.

7. திருமணம் செய்து கொள்ளாமல் இணைந்து வாழும் (லிவ் இன்)

தம்பதியருக்கும் இந்திய தண்டனைச் சட்டத்தின் (ஐபிசி) பிரிவு 498ஏ பொருந்தும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(i) கணவர் அல்லது அவரது உறவினர்கள் ஒரு பெண்ணுக்கு இழைக்கும் கொடுமைகள் குற்றமாகக் கருதப்பட்டு ஐபிசி 498ஏ பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்நிலையில், திருமணமாகாமல் ஆண் மற்றும் பெண் இணைந்து வாழும்பட்சத்தில் அந்த ஆணின் மீது ஐபிசி 498ஏ பிரிவின் கீழ் நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

(ii) இந்த மனுவை உச்சநீதிமன்ற நீதிபதிகள் சஞ்சய் கரோல் மற்றும் என். கோடீஸ்வர் சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது.

(iii) அப்போது நீதிபதிகள் அளித்த தீர்ப்பில், 'திருமணத்தை நோக்கமாகக் கொண்டு பரஸ்பர சம்மதத்துடன் இணைந்து வாழும் தம்பதியருக்கும் ஐபிசி பிரிவு 498ஏ பொருந்தும். இருப்பினும், திருமணமாகாமல் இணைந்து வாழும்போது பெண்ணை அந்த ஆண் அல்லது அவரது உறவினர்கள் யாரேனும் துன்புறுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டால் முதல்கட்ட விசாரணையின்றி அவர்களை கைது செய்யக் கூடாது. தங்களுக்கு அநீதி இழைக்கப்படும் என எதிர்பார்த்து யாரும் ஓர் உறவைத் தேர்ந்தெடுப்பதில்லை. வாழ்க்கைப் பயணம் மிகவும் அழகாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும் என எண்ணியே தம்பதிகள் சேர்ந்து வாழும் முடிவை மேற்கொள்கின்றனர். ஆனால் சிறிது காலத்துக்குப் பின் சில உறவுகள் சிறப்பாகத் தொடர்வதில்லை.

(iv) திருமணம் மற்றும் திருமணம் செய்துகொள்ளாமல் சேர்ந்து வாழ்வது என இரு வகையான உறவுகளிலும் பெண்களுக்கு கொடுமை இழைக்கப்பட வாய்ப்புள்ளது. எனவே, ஐபிசி பிரிவு 498ஏ-இன்கீழ் திருமணமான பெண்ணுக்கு மட்டுமே பாதுகாப்பு வழங்கப்படும் என்பது சரியல்ல. அவ்வாறு முறையிட்டால் அது அரசமைப்புச் சட்டத்தின் விதி 14-க்கு முரணாக அமையும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

8. அனில் குமார் லஹோதி - தலைவர், இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்.

9. ஃபேஸ்புக்கில் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்ட விடியோ நீக்கப்பட்ட

விவகாரத்தில் மெட்டா நிறுவனத் தலைவர் மார்க் ஸுக்கர்பெர்க் தனிப்பட்ட முறையில் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நாடாளுமன்ற நிலைக் குழுத் தலைவர் நிஷிகாந்த் துபே வலியுறுத்தியுள்ளார்.

10. உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 38-ஆக உயர்த்தி மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட அவசர சட்டத்துக்கு மாற்றான மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

11. எண்ம மற்றும் மெய்நிகர் வங்கிப் பதிவுகளை நீதிமன்றங்களில் ஏற்றுக்கொள்ளக் கூடிய சான்றுகளாக அங்கீகரிக்கவும், 125 ஆண்டுகள் பழைமையான ஆங்கிலேயர் ஆட்சி காலத்து சட்டத்தை மாற்றும் வகையிலும், புதிய 'வங்கிப் புத்தகங்கள் சான்று சட்ட மசோதா 2026-ஐ அமளிக்கிடையே மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் அறிமுகம் செய்தார்.

12. மருத்துவத் தொழில் சேவை சார்ந்த துறையிலிருந்து லாபத்தை மையமாகக் கொண்ட ஒரு வணிகத் துறையாக மாறியுள்ள நிலை.

(i) உத்தரப் பிரதேசத்தின் காசியாபாத்தில், பாலியல் வன்கொடுமைக்கு ஆளான 4 வயது சிறுமி ஒருவர் மயக்க நிலையில் இருந்தபோது, இரண்டு தனியார் மருத்துவமனைகள் அவசர சிகிச்சையளிக்க மறுத்ததால் உயிரிழந்தார். அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் அவர் இறந்தார்.

- இச்சம்பவம் குறித்து சிறப்பு விசாரணை கோரிய மனுவை விசாரித்தபோது, தங்கள் அடிப்படை கடமையைச் செய்யத் தவறும் மருத்துவர்கள், 'மருத்துவர்கள்' என்று அழைக்கப்படத் தகுதியற்றவர்கள் என்று தலைமை நீதிபதி சூர்யா காந்த் குறிப்பிட்டார்.

(ii) பிலாஸ்பூர் மாவட்டத்தில், போலி மருத்துவச் சான்றிதழ்களைப் பெற்று 17.2 கோடி ரூபாய் மதிப்பிலான மோசடி ஒன்றை ஒரு கும்பல் அரங்கேற்றியது. காப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்காக, இயற்கையான காரணங்கள் அல்லது விபத்துகளால் இறந்த 431 பேர் பாம்பு கடித்ததால் இறந்ததாக அவர்கள் பொய்யாகக் கூறினர். இத்தகைய போலிச் சான்றிதழ்களை வழங்க லஞ்சம் பெற்றதற்காக மருத்துவர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் உட்பட 17 பேர்

கைது செய்யப்பட்டனர்.

(iii) கோயம்புத்தூரில் நடைபெற்ற மருத்துவப் பட்டமளிப்பு விழாவில், சில தனியார் மருத்துவமனைகள் தேவையற்ற அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதாகவும், இது ஒட்டுமொத்த மருத்துவத் துறையின் நற்பெயரையும் களங்கப்படுத்துவதாகவும் தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

(iv) அனந்த்நாக் அரசு மருத்துவக் கல்லூரியில், கடந்த டிசம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட 103 இதய அறுவை சிகிச்சைகளில், 55 நோயாளிகளுக்கு மருத்துவத் தேவை ஏதுமின்றி 'பேஸ்மேக்கர்' (pacemaker) அல்லது 'ஸ்டென்ட்' (stent) பொருத்தப்பட்டது கண்டறியப்பட்டது. துறைசார் தணிக்கையின்போது இந்த முறைகேடு வெளிச்சத்திற்கு வந்தது.

(v) "மருத்துவச் சுற்றுலா" என்ற போர்வையில், எர்ணாகுளத்தில் ஒரு கும்பல் நிதி நெருக்கடியில் உள்ள ஏழை மக்களைக் குறிவைத்து, அவர்களின் உடல் உறுப்புகளை 5 முதல் 15 லட்சம் ரூபாய்க்கு வாங்கி, பெறுநர்களுக்கு 20 முதல் 35 லட்சம் ரூபாய்க்கு விற்று வந்தது. இந்தச் சட்டவிரோத வர்த்தகத்தில் பல மருத்துவர்கள் ஈடுபட்டிருப்பது கண்டறியப்பட்டது.

(vi) இத்தகைய முறைகேடுகளுக்கு மத்தியில், கோத்தகிரியைச் சேர்ந்த படுகர் இனத்தைச் சேர்ந்த மருத்துவர் என். தோனன் (85), தனது குடியாத்தம் மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வெறும் 3 முதல் 10 ரூபாய் வரை மட்டுமே கட்டணம் வசூலித்து சிகிச்சை அளித்து வந்தார்; மேலும் ஏழை எளிய மக்களுக்கு இலவச சிகிச்சையையும் மருந்தையும் வழங்கினார். ஜூலை 17 அன்று அவர் காலமானதைத் தொடர்ந்து, உள்ளூர் மக்கள் நகரம் முழுவதும் சுவரொட்டிகளை ஒட்டி தங்கள் ஆழ்ந்த துயரத்தை வெளிப்படுத்தினர்.

(vii) மருத்துவக் கல்விக்காக மாணவர்கள் கோடிக்கணக்கான ரூபாயைச் செலவிடும்போது, சேவை மனப்பான்மையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது அவர்களுக்குக் கடினமாகிறது.

(viii) தரமான உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் சிறப்பு மருத்துவர்களின் இருப்பு ஆகியவற்றில் அரசு மருத்துவமனைகள் பெரும்பாலும் பற்றாக்குறையை எதிர்கொள்வதால், பொதுமக்கள் தனியார் மருத்துவமனைகளை நாடுகின்றனர்.

(ix) 1,000 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) பரிந்துரைக்கும் நிலையில், இந்தியாவில் 811 பேருக்கு ஒரு

மருத்துவர் என்ற விகிதம் உள்ளது. மருத்துவர்கள் நகர்ப்புறங்களிலும் தனியார் துறையிலும் அதிகம் குவிந்திருப்பதாலும், இதனால் கிராமப்புறங்களில் போதிய மருத்துவ வசதிகள் கிடைக்காத நிலை இருப்பதாலுமே மருத்துவர்கள் பற்றாக்குறை இருப்பதாகக் கருதப்படுகிறது.

(x) சேவை மனப்பான்மையைச் சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்த முடியாது என்றாலும், பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்குக் குறைந்த செலவில் தரமான மருத்துவ வசதிகள் கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். முறைகேடுகளில் ஈடுபடுபவர்களைத் தண்டிப்பதும், வணிக ரீதியான சுரண்டலிலிருந்து சாமானிய மக்களைப் பாதுகாப்பதும் அவசியமாகும்.